# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



## நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்

**முன்னிலை: திரு.K.சண்முகம், எம்.இ, எம்.பி.ஏ.,**

**ந.க.எண்.558/2016/செம3** **நாள்.21.10.2016**

பொருள் கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், செட்டிபுண்ணியம் ஊராட்சி மற்றும் கிராமம், நிலஅளவை எண்கள்.**399**/3B; **414A**/1C2, 3-ல் 24227.74 சதுர மீட்டர் பரப்பளவு மனையிடத்திற்கு மனை ஒப்புதலும், அம்மனையிடத்தில் 8625.51 சமீ கட்டிட பரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள பலமாடி தொகுப்பு குடியிருப்பு கட்டுமான வரைபடங்களுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளித்தல் - குறித்து.

பார்வை
1. நகர் ஊரமைப்பு ஆணையர் (பொ) சென்னை அவர்களின் நடவடிக்கைகள் நக.எண்.10201/2016/சிபி நாள்.27.09.2016
2. மனுதாரர் தி/ள்.பல்லவா எஸ்டேட் LLP சென்னை என்பவரது மனு நாள்:-19.02.2016
3. ஊராட்சி மன்றத் தலைவர், செட்டிபுண்ணியம் ஊராட்சி மன்றம் அவர்கள் கடிதம் நாள்.27.05.2016
4. நகர் ஊரமைப்பு ஆணையர் (பொ) அவர்களின் செயலாணை எண்.10201/2016/சிபி, நாள்.02.08.2016 (பலமாடி கட்டிடப் பகுதியாக அறிவிப்பு)
5. நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலக கோப்பு எண்.2840/2013/சிபி, பலமாடி கமிட்டி கூட்டம் நடைபெற்ற நாள். 09.08.2016
6. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.28.03.2012
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண்.7486/2009/பிஏ2, நாள்.16.04.2009
8. நகர் ஊரமைப்பு ஆணையர்,அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண்.21075/2009/பிஏ1, நாள்.04.04.2012
9. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 12544/2014/சிபி, நாள்.04.07.2014
10. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 5013/2015/MP நாள்.19.03.2015
11. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நக.எண். 14748/2014/spl.cell நாள். 06.05.2015
12. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 7221/2015/BA1 நாள்.01.06.2016
13. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.05.10.2016 (பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய கோரியது மற்றும் உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி செலுத்தக் கோரியது)

.....2

14. மனுதாரர் திரு/ள்.பல்லவா எஸ்டேட் LLP அவர்களின் கடிதம் (ம) இணைப்புகள் நாள்.07.10.2016 (உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி ஆகியன செலுத்தியதற்கான விவரம் (ம) பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட விவரம்)

**********

<u>உத்தரவு</u>

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், செட்டிபுண்ணியம் ஊராட்சி மற்றும் கிராமம், நிலஅளவை எண்கள்.**399**/3B; **414A**/1C2, 3-ல் 24227.74 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் கீழ்கண்டவாறு பலமாடி தொகுப்பு குடியிருப்பு கட்டுமானங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**AREA STAEMENT**
**Area in Sq.m**

| Floor Details | Tower -4 | | Tower – 5 (EWS Block) | |
|---|---|---|---|---|
| | FSI | Non FSI | FSI | Non FSI |
| Stilt Floor | - | 494.84 (Parking) | - | 558.41 (Parking) |
| First Floor | 451.14 | 43.70 | 507.25 | 51.16 |
| Second Floor | 451.14 | 43.70 | 507.25 | 51.16 |
| Third Floor | 451.14 | 43.70 | 507.25 | 51.16 |
| Fourth Floor | 451.14 | 43.70 | 507.25 | 51.16 |
| Fifth Floor | 451.14 | 43.70 | 507.25 | 51.16 |
| Sixth Floor | 451.14 | 43.70 | 507.25 | 51.16 |
| Seventh Floor | 451.14 | 43.70 | 507.25 | 51.16 |
| Eighth Floor | 451.14 | 43.70 | 507.25 | 51.16 |
| Ninth Floor | 451.14 | 43.70 | 507.25 | 51.16 |
| Terrace Floor | - | - | - | - |
| Total Number of Dwelling Unit | 5 Dwelling Units per Floor X 9 Floors | | 10 Dwelling Units per Floor X 9 Floors | |

OSR : 2424.00 Sq.m

மேற்கண்ட உத்தேச தொகுப்பு குடியிருப்புகள் உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் பார்வை 1-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் முன்னிலை கடிதத்தில் கட்டிட அனுமதி வழங்க கட்டிட வரைபடங்களுக்கு கவ/ந.ஊ.இ.எண்.**163/2016** என எண்ணிட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

.....3

பார்வை 6-ல் கண்ட அரசாணையின்படி அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதி கட்டணம் மற்றும் நன்னிலை வரி ஆகிய கட்டணங்களை அரசுக்கு செலுத்தக்கோரியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யக் கோரியும் பார்வை 13-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்டது.

பார்வை 14-ல் கண்ட மனுதாரரின் கடிதங்கள் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதி கட்டணம் ரூ.32,43,750/- (ம) நன்னிலை வரி ரூ.18,000/- ஆகியவை செலுத்தப்பட்டதற்கான விவரம் (ம) பொது ஒதுக்கீடு திறவிடம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான தானப்பத்திர நகல் ஆகியன பெறப்பட்டுள்ளது.

மேற்படி உத்தேச மனையிடத்திற்கு **'A' to 'D'** என எல்லையிட்டு, மனை ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமான வரைபடங்களுக்கு **கவ/ந.ஊ.து.இ(செம) எண்.55/2016 (5 தாள்கள்)** என எண்ணிட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு உள்ளாட்சிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. The Project proponent / Applicant shall not commence any activity, excepting fencing of the site and construction of temporary shed for guard, without obtaining Environmental clearance under the EIA Notification, 2006 from the State Level Environment Impact Assessment Authority or the Ministry of Environment and Forests, Government of India, as applicable to the project, as per the threshold limits, Any violation from the above requirement is liable for action under section 19 of the Enviroment (Protection) Act, 1986.
2. பொது ஒதுக்கீடு திறவிடங்களை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்படவேண்டும்.
3. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
4. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்படவேண்டும்.
5. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant/developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
6. Applicant obtain consent form Tamil Nadu Pollution Control Board under section (25) of the water Act 1974 for discharge of sewage

7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்பபத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களின் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

8. The provisions in the G.O.(Ms.)No. 17, Housing and Urban Development (UD4)(3) department, dated:05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.]
9. The development in the site will be taken up in a phased manner. The applicant must apply for Environmental Clearance and can commernce construction only after obtaining Environmental Clearance.
10. The Conditions given in NOC of Fire and Rescue should be followed
11. Railway NOC should obtained before commencement of construction.
12. Storm water system should be made in the site as per the submitted report.
13. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Set back) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச தொகுப்பு குடியிருப்புகள் உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்படவேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்படவேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்படவேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்புச் சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல், நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.
13. கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்பு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு தலைவர், செட்டிபுண்ணியம் ஊராட்சி அவர்களை அனுகி இறுதி ஒப்புதல் பெறுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தலைவர், செட்டிபுண்ணியம் ஊராட்சி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

21/10/16

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ)
செங்கல்பட்டு-1

21.10.16 21/10/16

**இணைப்பு**
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் -2 தொகுப்பு
(2 x 5 = 10 )

**பெறுநர்**
ஊராட்சி மன்றத் தலைவர்
செட்டிபுண்ணியம் ஊராட்சி
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

**நகல்**
தி/ள்.பல்லவா எஸ்டேட் LLP
12, தெற்கு மாடவீதி, ஸ்ரீநகர் காலனி,
சைதாப்பேட்டை, சென்னை - 15

..........செட்டிபுண்ணியம்......ஊராட்சி......**மன்ற தலைவர்**

# அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு......ம. அருணா ஜெயச்சந்திரன்............

ந.க. எண்

காஞ்சிபுரம் மாவட்டம் செட்டிபுண்ணியம் ஊராட்சி ம.ம.ம. காட்டாங்கொளத்தூர் ஒன்றியம்

நாள்: 21. 10. 2016.

பொருள்: மனை பிரிவு / மனை உட்பிரிவு / கட்டிட வரைபட அனுமதி

..........செட்டிபுண்ணியம்..........ஊராட்சி

..................................................................................................

தெரு / ரோடு, புல எண்.........399/3B, 414/1C2,3.

மனை எண்............—.............................................ஆகியவற்றில்

கட்டிடம் சுற்றுச்சுவர் / கிணறு / முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

பார்வை : அரசு ஆணை எண். 255 நாள் : 19-8-1997

திரு / திருமதி......M/s. ............... LLP.......அவர்களின்

மனு நாள்.......17/10/2016.....

**உத்திரவு :**

திரு/திருமதி......M/s. ............... LLP......என்பவருக்கு......செட்டிபுண்ணியம்......

கிராமம்......செட்டிபுண்ணியம் கிராம சாலை.......தெரு, புல எண்.......399/3B, 414/1C-2,3.......மனை எண்.......

.........செட்டிபுண்ணியம்..........ஊராட்சி ஆகிய பகுதிகளில் கட்டிடம் / சுற்றுச்சுவர் / கிணறு /

(Stilt + 9 floors)

கழிப்பிடம் / குளியலறை / கடைகள் / முதல் தளம் / இரண்டாம் தளம் / பேருந்து வண்டிகள் நிறுத்துமிடம்

ஆகியவைகள் கட்டுவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த அனுமதியானது......21.10.16 to 20.10.19......ம் தேதி வரை ஒரு ஆண்டுக்கு செல்லுபடியாகும். அனுமதி

கட்டணம் ரூ.......2,33,000/-....(ரூபாய்.......இரண்டு லட்சத்தி முப்பத்தி மூன்று ஆயிரம்..........)

செலுத்தியமைக்கான பல வகைப்பட்ட ரசீது எண்.......................... நாள்.......21/10/16.......... மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட வரை படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## நிபந்தனைகள் :

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில்......As per DTCP approval......மீட்டருக்கு குறையாமலும், பின் பகுதியில்.......—.......மீட்டருக்கு குறையாமலும் இருபக்கங்களிலும்.........—.........மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.

2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994-ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலே ஆக்கிரமணம் செய்வது கூடாது.

4. கட்டட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.

5. இந்த உத்திரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.

6. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் / நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்திரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.

7. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தலைவருக்கு உரிமை உண்டு.

8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் அவசியம்.

9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.

10. கட்டிடத்திலிருந்து வரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படயிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்தும் மற்றும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தலைவர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

[illegible]

தலைவர்

தலைவர்

செட்டிபுண்ணியம் ஊராட்சி ........ஊராட்சி

........................................ஒன்றியம்

காஞ்சிபுரம் மாவட்டம்

பெறுநர்

திரு / திருமதி.

M/s. [illegible] LLP

12, [illegible]

[illegible]

சென்னை - 15



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate